**DEPOSITION OF WITNESS**

---

**MCOP. No. 589/2025** **DATE:19.11.2025**

Deposition of Witness : P.W.2

Name : Mr.Kamaraj

Father/Husband Name : Mr. Baalan

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 19th day of November 2025.

---

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் விபத்தினை கண்ணுற்ற சாட்சியாவேன். நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது மசாஆ 25 ஆகும்.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை ஏதும் வரவில்லை. காளிமுத்து என்பவர் சொன்னதன் பெயரில் இங்கு நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். காளிமுத்து என் பக்கத்து வீட்டுக்காரர். நான் வீடு புரோக்கராக இருக்கிறேன். நான் எத்தனை மணிக்கு வேலைக்கு கிளம்புவேன் என்றால் 6 மணிக்கெல்லாம் டீக் கடைக்கு சென்று உட்கார்ந்திருப்பேன். ஆட்கள் யாரும் வந்தால் அழைத்துச் செல்வேன். சம்பவம் நடந்தபோது நான் அந்த இடத்தில் இல்லை என்றும், காளிமுத்து என்னை வற்புறுத்தி அவரது உறவினர்களுக்கு அதிக இழப்பீடு பெற்றுத்தர வேண்டும் என்பதற்காக இவ்வாறு சாட்சியம் அளிக்க சொல்லி

என்னை அழைத்து வந்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் நான் சென்று போலிசில் புகார் கொடுத்த நபருடன் போலிஸ் ஸ்டேசன் சென்றிருப்பேன் என்றும், நான் அங்கு இல்லாததால் தான் போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் பக்கத்து வீட்டுக்காரரான காளிமுத்து என்பவருக்கு உதவி செய்து அதிக இழப்பீடு பெற்றுத்தரவே இந்த நீதிமன்றத்தின் முன்வந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:19.11.2025.

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

தலைமை நீதிபதி,
சிறுவழக்குகள் நீதிமன்றம்.